எம்.எஸ்ஸி. (நர்சிங்) போன்ற படிப்பு படிக்க டில்லிக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒரு போஸ்ட்-க்ராஜுவேட் கோர்ஸினை நம்முடைய கல்லூரிகளிலேயே ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. ஆனால், அதுபற்றி ஆலோசிக்கப் படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, செவிலியர்களுக்கு சமுதாயத்தில் கௌரவமும் மரியாதையும் ஏற்படுகிற வகையில் இன்னும் விரிவாக டிகிரி கோர்ஸ் அல்லது 'அட் லீஸ்ட்' டிப்ளமா கோர்ஸாவது சென்னையில் துவக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதற்கு முற்பட்ட துணைக் கேள்வியும் இதுபற்றியதுதான். அது ஆலோசிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

சென்னை துறைமுக விரிவாக்க வேலைகள்

*** 307 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சென்னை துறைமுகத்தை விரிவுபடுத்தும் வேலை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சென்னைத் துறைமுகத்தில் வெளிப்புறத் துறைமுகம், உலோகக் கனித்துறை மீன்பிடித் துறை கட்டுமான வேலைகளை சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம் செய்துவருகிறது.

( ) சென்னைத் துறைமுகத்தில் எண்ணெய், கனிப் போக்கு வரத்துக்கான வசதிகளுக்கான வெளிப்புறத் துறைமுகக் கட்டுமான வேலை 1966-ஆம் ஆண்டில் சென்னைத் துறைமுகத்தில் தொடங்கப் பட்டது. இது 1973 பெப்ரவரி 4-ல் செயல்படத் தொடங்கி வைக்கப் பட்டது. இதற்கு, தமிழ்க் கவிஞரும் தேசாபிமானியுமான திரு. சுப்பிரமணிய பாரதியாரின் பெயரில் " பாரதித்துறை " என்று பெயரிடப்பட்டது.

1973 நவம்பர் 22]

(ii) யந்திர விசை கொண்டு கனியைக் கையாள்கிற வசதிகளுடன் கூடிய கனித்துறைக் கட்டுமான வேலை நடைபெற்று வருகிறது. இது 1975-ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) சென்னைத் துறைமுகத்தில் 'மீன்பிடித் துறைமுகம் கட்டும் திட்டம்' 1975-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : சென்னை துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட எல்லாப் பணிகளும் எப்பொழுது தொடங்கி முடிவடையும் என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, எவ்வளவு பணம் என்பதுபற்றிய புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. ஆனால், அவர்கள் கொடுத்திருக்கிற காலகட்டத்திற்குள்ளாக, கடைசியாக முடியவேண்டிய காலம் 1975-ம் ஆண்டு டிசம்பர் என்று சொல்லுகிறார்கள், அதற்குள்ளாக முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Utilisation of surplus water near Madras

* 308 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to request the Corporation of Madras to give clearance for constructing bed dams across some of the rivers with a view to utilise the surplus water?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : செங்கல்பட்டு மாவட்டம், கேசவரம் கிராமத்தின் அருகில் குசத்தலை ஆற்றின் குறுக்கே ஓர் அணை கட்டும் திட்டம் பற்றி மாநகராட்சி கலந்தாலோசிக்கப்பட்டு, வீராணம் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின் இதனை பரிசீலனை செய்யலாம் என்ற மாநகராட்சியின் தீர்மானத்தை அரசு ஏற்றுக் கொண்டு இத்திட்டம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கின்ற ஆறுகளில் ஓடுகின்ற உபரி நீரைப் பயன்படுத்தும் வாய்ப்பும் உரிமையும் 300 அல்லது 400 ஆண்டுக்